**செய்தி வெளியீடு எண்:224** **நாள்:04.06.2021**

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆவின் பால் லிட்டர் ரூபாய் 3/– விலை குறைத்து ஆணை பிறப்பித்தார், உத்தரவை மீறி கூடுதலாக விற்பனை செய்த 10 சில்லறை விற்பனையாளர்களின் உரிமத்தை ரத்து செய்ய மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு. சா.மு.நாசர் அவர்கள் உத்தரவு.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின் பொதுமக்கள் அணைவரும் பயன்பெறும் வகையில் 5 முக்கிய அரசாணைகள் பிறப்பித்துள்ளார்கள், அதில் இரண்டாவதாக மக்களின் நலன் கருதி, ஆவின் பால் விலையை லிட்டர் ஒன்றுக்கு மூன்று ரூபாய் வீதம் குறைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு. சா.மு.நாசர் அவர்கள் நந்தனம் ஆவின் தலைமை அலுவலகத்தில் 16.05.2021 அன்று துவக்கி வைத்தார்.

**விற்பனை விலை:–**

இந்த அரசாணைக்கு ஏற்ப அனைத்து ஆவின் பார்லர்கள் மற்றும் சில்லறை விற்பனை கடைகளில் லிட்டர் ஒன்றுக்கு மூன்று ரூபாய் குறைத்து, ஆவின் பால் விற்பனை செய்யப்பட்டு வந்தது. அதனை தொடர்ந்து மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு. சா.மு.நாசர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், ஆவின் மேலாண்மை இயக்குநர் அவர்களால் உடனடியாக சிறப்பு குழுவை அமைத்து சென்னையில் உள்ள அனைத்து சில்லறை விற்பனை கடைகளிலும் ஆய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டது. அதன் அடிப்படையில் 21.05.2021 அன்று 11 சில்லறை விற்பனை உரிமங்கள் ரத்து செய்யப்பட்டன.

தற்பொழுது மேலும் சிறப்பு குழு பல்வேறு இடங்களில் சோதனை மேற்கொண்ட போது கீழ்கண்ட 10 சில்லறை விற்பனை கடைகளில் ஆவின் பால் கூடுதல் விலைக்கு விற்பதாக தெரியவந்தது.

| வ எண் | சில்லறை விற்பனையாளரின் உரிமம் (FRO) எண் | சில்லறை விற்பனையாளரின் பெயர் | விற்பனை செய்யப்பட்ட பகுதி |
|---|---|---|---|
| 1. | 2271 | திரு. நேதாஜி | ஈட்டியாபுரம் |

| | | | |
|---|---|---|---|
| 2. | 2316 | திரு. அமிர்தக்கவி | ஓல்டு பெருங்களத்தூர் |
| 3. | 1686 | திரு. ரூப் பிரசாத் | நியூ பெருங்களத்தூர் |
| 4. | 2097 | திருமதி. ஜெயந்தி | நியூ பெருங்களத்தூர் |
| 5. | 1986 | திரு. லக்ஷ்மணன் | வெஸ்ட் தாம்பரம் |
| 6. | 1639 | திரு. கோதண்டராமன் | வரதராஜபுரம் |
| 7 | 403 | சாய் ஸ்டோர்ஸ் | நியூ பெருங்களத்தூர் |
| 8 | 2169 | திரு. முரளிதாஸ் | சூளைமேடு |
| 9 | 1594 | திரு. வினோத் குமார் | வண்ணாரப்பேட்டை |
| 10 | 2197 | S.M மில்க் நிலையம் | திருவொற்றியூர் |

மேற்கண்ட நபர்களுடைய சில்லறை விற்பனை உரிமங்கள் உடனடியாக ரத்து செய்யப்பட்டன. இது போன்ற தவறுகளை சில்லறை விற்பனை உரிமையாளர்கள் செய்யும் பட்சத்தில் அவர்கள் உரிமம் ரத்து செய்யப்படும் என ஆவின் நிர்வாகம் தெரிவித்துக்கொள்கிறது.

**மேலாண்மை இயக்குநர்**
**த.நா.பா.உ.கூ.இணையம்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**